Tamilmanam – International Research Journal of Tamil Studies
An international, peer-reviewed academic journal
e-ISSN: 3049-0723
pISSN:3107-7781

தமிழ்மணம்
Peer-reviewed · Open access · Google Scholar · Crossref DOI
SJIF Impact Factor 3.5 · Monthly
Vol. 12, No. 06 (2026) p551 TIRJTS-2026-0048
DOI: 10.63300/tamilmanamintresjtamilstud.v12i06.30

RESEARCH ARTICLE

செவ்வியல் இலக்கியங்களில் இந்திரன் வழிபாடு

Worship of Indra in Classical Literature

P .GURUMOORTHI[1,*], Dr.S.VAITHEESWARAN[2]

[1] ULL TIME RESEARCH SCHOLAR DEPARTMENT OF TAMIL KALAIGNAR KARUNANIDHI GOVERNMENT ARTS COLLEGE, TIRUVANNAMALAI - 606603 AFFILIATED TO THIRUVALLUVAR UNIVERSITY, SERKKDU, VELLORE, 632115.

[2] ASSOCIATE PROFESSOR, DEPARTMENT OF TAMIL KALAIGNAR KARUNANIDHI GOVERNMENT ARTS COLLEGE, TIRUVANNAMALAI – 606603.

***Corresponding author:** P .GURUMOORTHI, gurumoorthiguru10@gmail.com

ARTICLE INFO

Article history
Received: 1 November 2026
Revised: 5 November 2026
Accepted: 10 November 2026

Article ID
TIRJTS-2026-0048

Peer review
Double-blind peer review

Keywords
இந்திரன் – வேந்தன் – புரந்தன் – இந்திரன் வழிபாடு – செவ்வியல் இலக்கியங்களில் இந்திரன் வழிபாடு – மருதத் திணை வழிபாடு – திணைக்கோட்பாடு

ABSTRACT

Indra is one of the primary deities with a long-standing history, appearing not only in Sangam literature but also within the broader framework of Indian culture and spiritual philosophy. In the Tolkappiyam, the ancient grammatical treatise of the Tamil South as well as in Sangam literature, he is worshipped as Vendhan*, the presiding deity of the Marutham* (agricultural) landscape, who bestows the rain essential for farming. In Vedic literature, he is revered as a warrior god wielding the Vajrayudha* (thunderbolt) a weapon that makes the entire universe tremble and as Devendra*, the destroyer of the *Asuras* (demons). This article explores in detail the nature-based worship of Indra specifically his role as a thinai* (landscape-specific) deity as depicted in the classical literature of the Tamil South.

How to cite this article: P .GURUMOORTHI, & Dr.S.VAITHEESWARAN (2026). செவ்வியல் இலக்கியங்களில் இந்திரன் வழிபாடு. *Tamilmanam – International Research Journal of Tamil Studies*, *12*(06), 551. https://doi.org/10.63300/tamilmanamintresjtamilstud.v12i06.30
Copyright and licence: © 2026 The Author(s). This is an open access article distributed under the terms of the Creative Commons Attribution 4.0 International License (CC BY 4.0), which permits unrestricted use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited.

ஆய்வாளர்: ப.குருமூர்த்தி (Reg.N:204PHD23F733TAM)

முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர், முதுகலை மற்றும் தமிழாய்வுத் துறை

கலைஞர் கருணாநிதி அரசு கலைக் கல்லூரி, திருவண்ணாமலை – 606 603.

திருவள்ளுவர் பல்கலைக்கழகத்துடன் இணைவுபெற்றது

Email: gurumoorthiguru10@gmail.com, Mob.no:8438832771.

நெறியாளர்: முனைவர் ச.வைத்தீஸ்வரன்

இணைப்பேராசிரியர், முதுகலை மற்றும் தமிழாய்வுத் துறை

கலைஞர் கருணாநிதி அரசு கலைக் கல்லூரி, திருவண்ணாமலை – 606 603.

முன்னுரை

சங்க இலக்கியங்கள் மட்டுமல்லாது பாரதப் பண்பாட்டிலும், ஆன்மீகத் தத்துவங்களிலும் மிக நீண்ட வரலாற்றைக் கொண்ட முதன்மைக் கடவுள்களில் ஒருவர் இந்திரன். அதே சமயம், தென்தமிழகத்தின் பண்டைய இலக்கணமான தொல்காப்பியத்திலும், சங்க இலக்கியங்களிலும் அவர் உழவுத் தொழிலுக்கு ஆதாரமான மழையைத் தரும் மருத நிலத் தெய்வமாக (வேந்தன்) வழிபடப்படுகிறார். வேத இலக்கியங்களில் அவர் அண்ட சராசரங்களையும் நடுங்கச் செய்யும் வஜ்ராயுதம் ஏந்திய போர்க் கடவுளாகவும், அசுரர்களை அழிக்கும் தேவேந்திரனாகவும் போற்றப்படுகிறார். தென்மொழிச் சங்க இலக்கியங்களின் இயற்கை வழிபாடு அதாவது திணைத் தெய்வமான இந்திரன் பற்றியச் செய்திகளை இக்கட்டுரை விரிவாக ஆராய்கிறது.

திறவுசொற்கள்

இந்திரன் – வேந்தன் – புரந்தன் – இந்திரன் வழிபாடு – செவ்வியல் இலக்கியங்களில் இந்திரன் வழிபாடு – மருதத் திணை வழிபாடு – திணைக்கோட்பாடு.

தொல்காப்பியம்

தமிழின் ஐவகை நிலப் பாகுபாட்டையும், அதற்குரிய தெய்வங்களையும் வரையறுக்கும் தொல்காப்பியம், மருத நிலத்தின் தெய்வமாக வேந்தனை (இந்திரனை) வர்ணிக்கிறது.

"மாயோன் மேய காடுறை உலகமும்

சேயோன் மேய மைவரை உலகமும்

வேந்தன் மேய தீம்புனல் உலகமும்

வருணன் மேய பெருமணல் உலகமும்..." **தொல்.பொரு.அக.நூ. - 5**

'தீம்புனல் உலகம்' எனப்படும் நீர் வளம் மிக்க மருத நிலத்திற்குரிய கடவுள் 'வேந்தன்' (இந்திரன்) ஆவார். உழவுத் தொழில் சிறக்க மழையைத் தரும் தெய்வமாகத் தமிழர்கள் இவரை வழிபட்டனர் என தொல்காப்பியத்தின் வாயிலாக அறியமுடிகிறது.

நற்றிணை மற்றும் குறுந்தொகை

எட்டுத்தொகை நூல்களான நற்றிணை மற்றும் குறுந்தொகையில் 'இந்திரன்' என்ற பெயர் நேரடியாக இடம்பெறவில்லை. ஆனால், இந்திரனுடன் தொடர்புடைய மழை மேகங்கள், வானவில், இடி மற்றும் 'வேந்தன்' (மருத நிலக் கடவுள்) பற்றிய குறிப்புகள்

அகப்பொருள் பாடல்களில் இயற்கைப் பின்னணியாகவும் உவமைகளாகவும் எடுத்தாளப்பட்டுள்ளன.

சங்க காலத்தில் இடியுடன் கூடிய மழை பொழிவது வானுலகத் தலைவனான இந்திரனின் அருளாகக் கருதப்பட்டது. இதனை நற்றிணையின் 7-வது பாடல் சிறப்பாகப் பதிவு செய்துள்ளது.

"சூருடை நனந்தலை சுனைநீர் மல்க

பெரு வரை அடுக்கத்து அருவி ஆர்ப்ப

.....

தழங்கு குரல் ஏறொடு முழங்கி வானம்

இன்னே பெய்ய மின்னுமால் தோழி! " நற்றி.பா.-7

சுனைகளில் நீர் பெருகவும், மலை அருவிகள் ஆர்ப்பரிக்கவும் வானமானது இடியோடு முழங்கி மின்னலுடன் மழையைப் பொழிகிறது என மழையின் வலிமை போற்றப்பட்டுள்ளது. நற்றிணையில் இவ்வாறாக இந்திரன் தொடர்புடைய மழை, இடி போன்றச் செய்திகள் காணப்படுகின்றன.

ஐங்குறுநூறு

சங்க இலக்கியத்தில் இந்திர விழாவைப் பற்றி நேரடியாகப் பேசும் நூல்களில் ஐங்குறுநூறும் ஒன்றாகும். மருதத் திணையின் கீழ் 'கிழத்தி கூற்றுப் பத்து' பகுதியில் புலவர் ஓரம்போகியார் இதனைப் பாடியுள்ளார்.

"இந்திர விழவிற் பூவின் அன்ன

புன்தலைப் பேடை வரிநிழல் அகவும்

இவ்வூர் மங்கையர்த் தொகுத்து இனி

எவ்வூர் நின்றன்று மகிழ்ந நின் தேரே?" ஐங்கு.பா. 62

'இந்திர விழவில் பூவின் அன்ன' என்பது இந்திரனுக்குச் செய்யப்படும் பெருவிழாவில் சிதறிக்கிடக்கும் வண்ண மலர்களைப் போன்ற என்ற பொருளைத் தருகிறது. அத்தகைய பூக்களைப் போலச் சிவந்த கொண்டையையுடைய குயிற்பேடை (அல்லது கோழிப் பேடை) மரங்களின் வரிநிழலில் நின்று தன் துணையை அழைக்கும் ஊர் இதுவாகும். தலைவனே, இவ்வூரில் உள்ள இளம்பெண்களை எல்லாம் உன் தேரில் ஏற்றிக்கொண்டு இந்திர விழா கண்டு மகிழ்ந்தாயே, இப்போது உன் தேர் எந்த ஊரில் போய் நின்றதோ என்று தலைவி ஊடலோடு கேட்கிறாள்.

மருத நிலத்து மக்களின் முதன்மைக் கடவுளான இந்திரனுக்கு (வேந்தனுக்கு) ஊர்மக்கள் அனைவரும் ஒன்றுகூடி மலர் தூவிப் பெருவிழா எடுத்தனர் என்பதை

இப்பாடல் உறுதிப்படுத்துகிறது. இளவேனிற் காலத்தில் குயில்கள் கூவும் பருவத்தில் இவ்விழா நடைபெற்றது என்பதும் இதன் வழி புலனாகிறது. மேலும் சில இடங்களில் இந்திரன் பற்றிய மறைமுக குறிப்புகள் காணலாகிறது.

பதிற்றுப்பத்து

குமட்டூர்க் கண்ணனார் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனை புகழ்ந்துப் பாடியப் பாடல் ஒன்றில், மழை பொழியும் மேகங்களையும், தேவர்களின் தலைவனான இந்திரனின் போர்க்களச் சிறப்பையும் (வச்சிராயுதம்) சேர மன்னனின் ஆட்சியோடும் கொடையோடும் புலவர் ஒப்பிடுகிறார்.

"உருமு உடன்று எறிந்த உட்குடை அரவின்

அருமழை தரூஉம் அழிதுளி போல

உரைசால் சிறப்பின் உரவோர் மருக..." பதிற்று.14, அடி. 1-3

எனும் பாடலில் இடி முழங்க, உயிர்கள் நடுங்கும்படிப் பொழிந்து உலகைக் குளிர்விக்கும் பெருமழையைப் போல, புகழ்மிக்க முன்னோர்களின் வழியில் வந்த நெடுஞ்சேரலாதன், தன்னை நாடி வருபவர்களின் வறுமை நீங்க வளங்களை வாரி வழங்குகிறான் என்று மழையினை உவமையாகக் கொண்டுள்ளது. இந்த நூலிலும் இந்திரன் பற்றியக் குறிப்புகள் அதிக அளவில் காணவில்லை.

பரிபாடலில்

சங்க இலக்கியமான பரிபாடலில் இந்திரன் பற்றிய நேரடிப் பெயர்ச் சுட்டல்களும், புராணப் பின்னணி கொண்ட மறைமுக வருணனைகளும் மிகுதியாக இடம்பெற்றுள்ளன. பிற சங்க நூல்களைப் போலன்றி, பரிபாடலில் இந்திரன் தனிப்பட்ட பெருந்தெய்வமாகப் போற்றப்படாமல், திருமால் மற்றும் செவ்வேள் (முருகன்) ஆகியோரின் பெருமைகளை உணர்த்தும் துணைக் கதாபாத்திரமாகவும், புராண ஓவியமாகவும் சித்தரிக்கப்பட்டுள்ளான்.

“இந்திரன், பூசை; இவள் அகலிகை; இவன்

சென்ற கவுதமன்; சினன் உறக் கல் உரு

ஒன்றிய படி இது’ என்று உரை செய்வோரும்" பரிபாடல் 19: 50–52

திருப்பரங்குன்றத்தில் இருந்த 'எழுத்துநிலை மண்டபம்' (ஓவியக் கூடம்) என்னும் இடத்தில் தீட்டப்பட்டிருந்த ஓவியங்களைக் கண்டு மக்கள் உரையாடுவதாகப் புலவர் நப்பண்ணனார் இதைப் பாடியுள்ளார். இதில் இந்திரன் பூனை வடிவம் எடுத்து வந்ததும், அகலிகை, சினம் கொண்டு திரும்பிய கௌதம முனிவர், அவரது சாபத்தால் அகலிகை கல் உருவான காட்சி ஆகியவை நேரடியாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. மேலும்,

“மன்றல் கலந்த மணி முரசின் ஆர்ப்பு எழ

காலொடு மயங்கிய கலிழ் கடலென

மால் கடல் குடிக்கும் மழைக் குரலென

ஏறு அதிர்க்கும் இந்திரன் இரும் உருமென

மன்றல் அதிரதிர மாறுமாறு அதிர்க்கும் நின்

குன்றம் குமுறிய உரை “ **பரிபாடல் 8: 30-35**

க்ரௌஞ்ச கிரியைத் துளைத்த வேலை யுடையவனே! மதுரையில் மணமுரசுகளின் முழக்கம் எழுந்தது. காற்றால் அலைபட்ட கடலைப் போலவும், கடலைக் குடிக்கும் மேக முழக்கத்தைப்போலவும், இந்த்ரனின் இடி முழக்கத்தைப் போலவும், அம்முரசுகள் அதிர்ந்தன..அதற்கு மாறிமாறி பரங்குன்றத்தில் முழக்கம் (எதிரொலி)எழுந்தது. மழை மேகங்கள் சூழ்ந்த திருப்பரங்குன்றத்தின் மீது வானவில் தோன்றும் அழகைப் புலவர் நல்லந்துவனார் "இந்திரன் வில்" என்று நேரடியாகச் சுட்டிக்காட்டுகிறார்.

பரிபாடல் 5-ஆம் பாடலில் கடுவன் இளவெயினனார் பாடியது முருகப்பெருமானின் பிறப்பு வரலாற்றைக் கூறும்போது, இந்திரன் நேரடிப் பெயரால் அழைக்கப்படாமல் பல்வேறு அடைமொழிகளால் மறைமுகமாகக் குறிப்பிடப்படுகிறான்.

“உமையொடு புணர்ந்து, காம வதுவையுள்,

அமையாப் புணர்ச்சி அமைய, நெற்றி

இமையா நாட்டத்து ஒரு வரம் கொண்டு” **பரிபாடல் 5: 28-30**

நூறு அசுவமேத வேள்விகளைச் செய்து தேவர்களின் தலைவனான இந்திரனை "விண்ணோர் வேள்வி முதல்வன்" எனப் பரிபாடல் குறிப்பிடுகிறது. சிவபெருமானிடம் சென்று, அசுரர்களை அழிக்கப் பிறக்கும் குழந்தையைத் தடுக்க வேண்டும் என இந்திரன் வரம் கேட்ட செய்தியை இவ்வரி உணர்த்துகிறது. மேலும்,

“ ஆரா உடம்பின் நீ அமர்ந்து விளையாடிய

போரால் வறுங் கைக்குப் புரந்தரன் உடைய” **பரிபாடல் 5: 55-56**

எனும் பாடல் வரியில் புரந்தரன் என்பது இந்திரனின் மற்றொரு பெயராகும். சரவணப் பொய்கையில் ஆறு தாமரைகளில் இருந்த குழந்தைகளை இந்திரன் தன் வஜ்ராயுதத்தால் தாக்கினான். அப்போது ஆறு குழந்தைகளும் ஒன்று சேர்ந்து ஒருருவமான முருகனுடன் நிகழ்ந்த போரில், புரந்தரன் (இந்திரன்) ஆயுதமிழந்து வெறுங்கையுடன் தோற்று ஓடினான் என்பதை இப்பாடல் விவரிக்கிறது. இவைத் தொடர்ந்து,

“மறு இல் துறக்கத்து அமரர் செல்வன்தன்

பொறி வரிக் கொட்டையொடு புகழ் வரம்பு இகந்தோய்" **பரிபாடல் 5:69-70**

விண்ணுலகத் தேவர்களின் தலைவனான இந்திரனை "துறக்கத்து அமரர் செல்வன்" எனப் பரிபாடல் போற்றுகிறது. முருகன் குழந்தைப் பருவத்திலேயே இந்திரனின் புகழை விட உயர்ந்த நிலையை அடைந்தான் என்பது இதன் பொருளாகும்.

"தீ வளி விசும்பு நிலன் நீர் ஐந்தும்,

ஞாயிறும், திங்களும், அறனும், ஐவரும்,

திதியின் சிறாரும், விதியின் மக்களும்,

மாசு இல் எண்மரும், பதினொரு கபிலரும்,

தா மா இருவரும், தருமனும், மடங்கலும்,

மூ ஏழ் உலகமும், உலகினுள் மன்பதும்,

மாயோய்! நின்வயின் பரந்தவை உரைத்தேம்" **பரிபாடல் 3: 4-10**

திருமாலின் பெருமையைப் பாடும்போது, தேவர்கள் பலரையும் பரிபாடல் பட்டியலிடுகிறது. இதில் வசுக்கள், ஆதித்தர்கள், உருத்திரர்கள் ஆகியோருடன் இந்திரன் உள்ளிட்ட விண்ணோர்கள் அனைவரும் திருமாலின் திருவடியைப் பணிந்து நிற்பதாக மறைமுகமாகச் சுட்டப்படுகிறது.

கலித்தொகை

கலித்தொகையில் 'இந்திரன்' என்ற நேரடிச் சொல் ஆளப்படாவிட்டாலும், அவனை மட்டுமே குறிக்கும் தனித்துவமான அடையாளங்களான வச்சிராயுதம் மற்றும் ஆயிரம் கண்கள் ஆகியவை உவமைகளாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. ஏறு தழுவுதல் (ஜல்லிக்கட்டு) நிகழ்வில், உடம்பெல்லாம் புள்ளிகளைக் கொண்ட ஒரு காளையை வருணிக்கும்போது, சோழன் நல்லுருத்திரன் இந்திரனை உவமையாகக் கூறுகிறார்.

"வச்சிரப் படை கொண்டோன் ஆயிரம் கண் ஏய்ப்ப..." **கலித். 105: 15**

இவற்றில் வச்சிராயுதத்தைக் கையில் ஏந்திய இந்திரனின் உடம்பில் உள்ள ஆயிரம் கண்களைப் போல, அந்தக் காளையின் உடம்பில் புள்ளிகள் காணப்பட்டன என்பது இதன் பொருள். அகலிகை சாபத்தால் இந்திரன் ஆயிரம் கண்கள் பெற்ற புராணக் கதை இங்கு நேரடியாக எடுத்தாளப்பட்டுள்ளது.

அகம் மற்றும் புறநானூறு

புறநானூற்றில் இந்திரன் மிகத் தெளிவாக அவனது ஆயுதத்தின் பெயரால் அடையாளப்படுத்தப்படுகிறான். உறையூர் ஏணிச்சேரி முடமோசியார் பாடிய பாடலில், வள்ளல் ஆய் அண்டிரன் இறந்த பிறகு விண்ணுலகம் செல்வதைப் புலவர் பாடுகிறார். வச்சிராயுதத்தை ஏந்திய பெரிய கைகளையுடைய நெடியோனாகிய

இந்திரனின் கோயிலுக்குள், ஆய் அண்டிரனை வரவேற்கும் முரசு ஒலி வானத்தில் எழுந்ததாகப் பாடல் வரிகள் கூறுகின்றன. அவை,

"வச்சிரத் தடக்கை நெடியோன் கோயிலுள்

போர்ப்புறு முரசும் கறங்க

ஆர்ப்புஎழுந் தன்றால் விசும்பி னானே" புறம் 241: 3-5

அகநானூற்றில் 'இந்திரன்' என்ற சொல்லோ 'வச்சிரம்' என்ற சொல்லோ நேரடியாக இடம்பெறவில்லை. ஆனால், தொல்காப்பியம் கூறும் மருத நிலத் தெய்வமான 'வேந்தன்' வழிபாடும், மழை மற்றும் வேள்வி தொடர்பான குறிப்புகளும் இந்திரனோடு தொடர்புபடுத்திப் பார்க்கப்படுகின்றன.

பத்துப்பாட்டு

பத்துபாட்டில் திருமுருகாற்றுப்படையில் இந்திரன் தேவலோகத்தின் தலைவனாகவும், முருகனின் பிறப்பில் பலவிடத்தும் இணைத்துக் காணப்படுகின்றான். மதுரைக்காஞ்சியில் இந்திரன் பற்றியக் குறிப்புகள் காணப்படுகிறது. மேலும் உள்ளப் பாடல்களில் இந்திரன் நேரடியாகவும் உவமைகளின் மூலமாகவும் குறிப்பிடப்படுகின்றான்.

சிலப்பதிகாரம்

சிலப்பதிகாரத்தில் இந்திரன் வழிபாடும், புகார் நகரத்தில் மிக விமரிசையாகக் கொண்டாடப்பட்ட இந்திர விழாவும் பல இடங்களில் சான்றுகளுடன் விரிவாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன. சித்திரை மாதம் முழுநிலவு (சித்ரா பௌர்ணமி) நாளன்று இந்திர விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இதற்கு ஏழு நாட்களுக்கு முன்பே கணுவெழுந்த பொன்மூங்கில் தண்டு நட்டு விழாவிற்கான கால்கோள் நிகழ்த்தப்பட்டது.

அரங்கேற்று காதையில் தலைக்கோல் வழிபாட்டில் இந்திரனின் மகனான சயந்தன் அகத்திய முனிவரின் சாபத்தால் மூங்கிலாக மாறினான். அந்த மூங்கிலால் செய்யப்பட்ட தலைக்கோலை இந்திரனின் அம்சமாகக் கருதிப் புண்ணிய நீராட்டி வழிபட்டதை இப்பாடல் வரிகள் கூறுகின்றன.

"தெய்வ மால்வரைத் திருமுனி அருள

எய்திய சாபத்து இந்திர சிறுவனொடு

தலைக்கோல் தானத்துச் சாபம் நீங்கிய..." அரங்கே.காதை: 1-3

புகார் நகரத்தில் சித்திரை முழுநிலவு நாளில் இந்திர விழாவைக் கொண்டாட முரசறைந்து அறிவித்ததையும், வச்சிரக்கோட்டம் மற்றும் ஐராவதக் கோயிலில் நடைபெற்ற வழிபாடுகளையும் இப்பாடல் வரிகள் காட்டுகின்றன.

"வச்சிரக் கோட்டத்து மணம் கெழு முரசம்

கச்சை யானைப் பிடர்த்தலை ஏற்றி,

வால் வெண் களிற்று-அரசு வயங்கிய கோட்டத்துக்

கால்கோள் விழவின் கடைநிலை சாற்றி..." **இந்திரவிழவு ஊர் எடுத்த காதை: 141-144**

எனும் வரிகளில் இந்திரனின் வச்சிராயுதக் கோயிலில் இருந்த மங்கல முரசத்தை, பட்டத்து யானையின் பிடரியில் ஏற்றி, வெள்ளையானையாகிய ஐராவதக் கோயிலில் இருந்து விழாவிற்கான கால்கோள் அறிவிப்புச் செய்யப்பட்டது எனும் செய்தி அறியமுடிகிறது.

அசுரர்களை வென்று அமராவதியைக் காத்த இந்திரனின் பெருமையையும், தென்திசையில் உள்ள புகார் நகரில் இந்திர விழா கொண்டாடப்படுவதையும் விஞ்சைவீரன் தன் காதலிக்குக் கூறுவதாக இவ்வரிகள் அமைந்துள்ளன. தென்திசையில் உள்ள வளமான புகார் நகரத்தில், அசுரர்களை வென்று தேவலோகத்தைக் காத்த இந்திரனுக்கு விழா எடுக்கும் திருநாள் இதுவாகும். எனும் செய்தியை கீழ்கானும் பாடல் வரிகள் புலப்படுத்துகிறது.

"தென் திசை மருங்கின் ஓர் செழும் பதி-தன்னுள்

இந்திர விழவு கொண்டு எடுக்கும் நாள் இது என-

கடு விசை அவுணர் கணம் கொண்டு ஈண்டி,

கொடுவரி ஊக்கத்துக் கோ-நகர் காத்த

தொடு கழல் மன்னற்குத் தொலைந்தனர் ஆகி..." **கடலாடு காதை: 1-5**

மணிமேகலை

ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்றான மணிமேகலை காப்பியத்தை இயற்றியவர் மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார் ஆவார். இந்நூலின் முதல் காதையான விழாவறை காதை, சோழர்களின் தலைநகரான புகார் நகரத்தில் 28 நாட்கள் கொண்டாடப்பட்ட இந்திர வழிபாட்டின் தோற்றம், சமய நல்லிணக்கம் மற்றும் விழாச் சிறப்புகளை விரிவாக எடுத்துரைக்கிறது.

இந்திர விழா தோன்றிய வரலாறு பற்றிய செய்தி வருமாறு, மருத நிலக் கடவுளான வேந்தனை (இந்திரன்) வழிபட்டால் நாட்டில் மழை பொழிந்து வேளாண்மை செழிக்கும் என்பது பழந்தமிழர் நம்பிக்கையாகும். பொதிய மலையில் தவம் செய்த அகத்திய

முனிவரின் அறிவுரைப்படி, சோழ மன்னன் தூங்கெயில் எறிந்த தொடித்தோட் செம்பியன், இந்திரனை வணங்கித் தனது புகார் நகரில் விழா நடைபெறும் 28 நாட்களும் வந்து தங்கியிருக்க வேண்டினான்.

"தூங்குஎயில் எறிந்த தொடித்தோள் செம்பியன்

விண்ணவர் தலைவனை வணங்கிமுன் நின்று

மண்ணகத்து என்தன் வான்பதி தன்னுள்

மேலோர் விழைய விழாக்கோள் எடுத்த

நால்ஏழ் நாளினும் நன்குஇனிது உறைகென

அமரர் தலைவன் ஆங்குஅது நேர்ந்தது" **மணி.விழா.காதை: 4 -9**

விளக்கம். 'நால் ஏழ் நாள்' 28 நாட்கள் புகார் நகரில் இனிதே தங்கியிருக்க வேண்டும் என்ற செம்பியனின் வேண்டுகோளைத் தேவர் தலைவன் இந்திரன் ஏற்றுக்கொண்டான் என்பதை இவ்வரிகள் உணர்த்துகின்றன.

விழாத் தொடக்கத்தை அறிவிக்கும் வள்ளுவன் யானை மீது அமர்ந்து, நகர வீதிகளில் புதுமணல் பரப்பவும், தோரணங்கள் கட்டவும் ஆணையிட்டதோடு நாட்டின் நலனுக்காக வாழ்த்தி முரசறைந்தான்.

"ஒளிறுவாள் மறவரும் தேரும் மாவும்

களிறும் சூழ்தரக் கண்முரசு இயம்பிப்

பசியும் பிணியும் பகையும் நீங்கி

வசியும் வளனும் சுரக்கென வாழ்த்தி

அணிவிழா அறைந்தனன் அகநகர் மருங்கு" **மணி.விழா. காதை 68–72**

வாள் ஏந்திய வீரர்கள், தேர், குதிரை, யானைப் படைகள் சூழ முரசறைந்த வள்ளுவன், நாட்டில் பசி, நோய் (பிணி), பகை ஆகிய மூன்றும் நீங்கி, மழையும் (வசி) செல்வ வளமும் பெருக வேண்டும் என வாழ்த்தி விழாவைத் தொடங்கி வைத்தான்.

இந்திர விழாவை நடத்த மறந்தால், புகார் நகரைக் காக்கும் நாளங்காடிப் பூதமும் சதுக்கப் பூதமும் சினந்து நகரத்திற்குத் துன்பம் விளைவிக்கும் என்ற நம்பிக்கை நிலவியது. எனவே, மக்கள் அப்பூதங்களுக்குப் பலி கொடுத்து வழிபட்ட பிறகே இந்திர வழிபாட்டைத் தொடங்கினர். மணிமேகலை காட்டும் இந்திர வழிபாடு, பழந்தமிழர்களின் மழை மற்றும் வேளாண்மை சார்ந்த வாழ்வியலையும், பல்வேறு சமயத்தவரும் ஒன்றிணைந்து வாழ்ந்த உயரிய பண்பாட்டையும் மேற்கோள் பாடல்கள் வழி தெள்ளத்தெளிவாகப் படம்பிடித்துக் காட்டுகிறது.

திருக்குறள்

ஐம்புலன்களை அடக்குவதன் பெருமையைக் கூறும்போது, வள்ளுவர் இந்திரனைச் சான்றாகக் காட்டுகிறார். கௌதம முனிவரின் சாபத்தால் இந்திரன் துன்பமடைந்த புராணக் கதையை இது சுட்டுகிறது.

"ஐந்தவித்தான் ஆற்றல் அகல்விசும்பு ளார்கோமான்

இந்திரனே சாலுங் கரி." **குறள் - 25**

ஐம்புலன்களையும் அடக்கியவனின் வலிமைக்கு, அகன்ற வானத்து தேவர்களின் அரசனான இந்திரனே போதுமான சான்றாவான் என இந்திரன் பற்றியச் செய்தியை குறள் பதிவு செய்கிறது.

நாலடியார்

நிலையாமை மற்றும் தவத்தின் வலிமையை விளக்கும்போது தேவேந்திரனின் போக வாழ்வும் நிலையானதல்ல என நாலடியார் குறிப்பிடுகிறது. தேவேந்திரனுக்கு இணையான பெரிய செல்வச் சிறப்பை அடைந்தாலும், அதுவும் இடைவெளியின்றி அழிந்துபோகும் தன்மையுடையது. இச்செய்தியைக் பின்வரும் பாடல் பதிவுச்செய்கிறது.

"இந்திரன் ஏனும் இருஞ்சிறப்பு எய்தியக்கால்

அந்தரம் இன்றி அழியுமால்..." **நாலடி.பா. 9**

முத்தொள்ளாயிரம்

சேர, சோழ, பாண்டிய மன்னர்களின் வீரத்தையும் கொடையையும் பாடும் முத்தொள்ளாயிரத்தில், நேரடியான இந்திர வழிபாடு அல்லது இந்திர விழா பற்றிய பாடல்கள் இல்லை. மாறாக, மூவேந்தர்களின் சிறப்பையும் அழகையும் தெய்வங்களோடு ஒப்பிடும்போது இந்திரன் மற்றும் தேவர்கள் பற்றிய நேரடிக் குறிப்புகள் பாடல்களில் இடம்பெற்றுள்ளன.

சேர மன்னன் கோதையின் பேரழகைக் கண்ட தலைவி ஒருத்தி, அவனை இந்திரன், சிவன், முருகன், திருமால் ஆகிய தெய்வங்களோடு ஒப்பிட்டு, இறுதியில் அவன் திருமாலே எனத் தெளிவதாக இப்பாடல் அமைந்துள்ளது.

"இந்திரன் என்னின் இரண்டேகண் ஏறூர்ந்த

அந்தரத்தான் என்னின் பிறையில்லை – அந்தரத்துக்

கோழியான் என்னின் முகன்ஒன்றே கோதையை

ஆழியான் என்றணரற் பாற்று." **முத்தொ.பா.24**

இம்மன்னனை இந்திரன் என்று கருதினால், இந்திரனுக்கு ஆயிரம் கண்கள் உண்டு; ஆனால் இவனுக்கு இரண்டே கண்கள்தான் உள்ளன. காளை வாகனத்தில் ஏறும் சிவபெருமான் என நினைத்தால், இவன் தலையில் பிறை நிலா இல்லை. கோழிக்கொடியை உடைய முருகன் என நினைத்தால், இவனுக்கு ஒரு முகமே உள்ளது. எனவே, இச்சேர மன்னன் கோதையைத் திருமால் (ஆழியான்) என்றே உணர்ந்து கொள்ள வேண்டும். இவ்வாறக இப்பாடலில் இந்திரனை பற்றியக் குறிப்பு வருகின்றன.

இந்திரனின் தலைமையிலான தேவர்கள் இமையார், பாண்டிய மன்னனின் ஆணைக்குக் கட்டுப்பட்டு பூமியில் கால் பதிக்காமல் அந்தரத்திலேயே நிற்கின்றனர் என்ற கற்பனை நயமிக்க குறிப்பு பாடல் ஒன்றில் உள்ளது. அவை,

"நேமி நிமிர்தோள் நிலவுதார்த் தென்னவன்

காமர் நெடுங்குடைக் காவலன் - ஆணையால்

ஏம மணிப்பூண் இமையார் திருந்தடி

பூமி மிதியாப் பொருள்." **முத்தொ. பாண்டி. திறை**

பூவுலகைத் தாங்கும் உயர்ந்த தோள்களையும் வெண்கொற்றக் குடையையும் உடைய பாண்டிய மன்னனின் ஆணையால், பொன் அணிகலன்களை அணிந்த கண் இமைக்காத தேவர்கள் (இந்திரன் உள்ளிட்ட விண்ணவர்கள்) தங்கள் பாதங்களைப் பூமியில் மிதிக்காமல் (மண்ணில் கால் வைத்தால் பாண்டியனுக்குத் திறை செலுத்த நேரிடும் என அஞ்சி) மிதந்து கொண்டிருக்கின்றனர்.

திணைக்கோட்பாட்டில் இந்திரன் வழிபாடு

வழிபாடு என்பது ஆதிகால மனிதன் அச்சத்தின் பொருட்டும், தமக்கு நன்மைகள் ஏற்படும் பொருட்டும் தோன்றினர் என்பது பல அறிஞர்களின் கருத்து. சங்க காலத்துக்கு முந்தைய இலக்கியம் நமக்குக் கிடைக்கவில்லை. கடைச்சங்க காலத்தைய இலக்கியம் மட்டும் கிடைத்துள்ளது. தொல்காப்பியம், சங்க இலக்கியம் மற்றும் பிந்தைய இரட்டைக் காப்பியங்கள் வாயிலாக அவ்வபோது இந்திரன் வழிபாடு சிறப்புற்று இருந்ததை அறியமுடிகிறது. சங்க இலக்கிய காலத்து மக்கள் வாழ்க்கையானது முழுமையாக திணைக்கோட்பாட்டினைச் சார்ந்து அமைந்தது. வாழ்வை இரண்டாகப் பகுத்து ஒன்று அகம் என வைத்து அவற்றில் முதல், கரு, உரி என வகைப்படுத்தி விதிகளை வகுத்து களவு, கற்பு என வாழ்வை அமைத்தனர். மற்றொன்று புறம் என வைத்து வெட்சி முதலான திணைகளை வகைப்படுத்தி அவற்றிற்கான விதிகளை வகுத்து வாழ்ந்தனர். இவ்விடத்து தெய்வம் எனும் கோட்பாடு அகத்திணையில் அதிகம் இடம்பெருகிறது.

தொல்காப்பியரும் மருதத் திணையின் தெய்வமாக இந்திரனை(வேந்தன்) சுட்டுகிறார்.மேற்கண்ட சான்றுகள் வாயிலாக இந்திரன் மழை, பயிர் வளம் மற்றும் தேவலோகத்தின் வேந்தன் என அறியமுடிகிறது. மருத நிலம் முழுவதுமாக வேளாண்மைச் சார்ந்தது ஆகையால் இந்திரனை வழிபட்டனர் என அறியமுடிகிறது. திணைக் கோட்பாடு சங்க காலத்தில் செவ்வனே நடைப்பெற்றது, பேரரசுகள் தோன்றியப் பின்னர் திணைக் கோட்பாடு சிதைந்து இந்திரன் திசைத் தெய்வமாக மாற்றப்பட்டதைக் காணமுடிகிறது.

முடிவுரை

மருதத் திணையின் தெய்வமான இந்திரன் சங்க காலம் முதலே தமிழக மக்களால் மிகவும் சிறப்பாக வழிபடபட்டு வந்துள்ளான். காப்பிய காலத்தில் சிறப்பாக விழாக்கள் எடுக்கப்பட்டன.சங்க காலத்துக்கு பிறகு திணைக்கோட்பாடு சிதைவுற்றது. பத்தி இயக்க காலத்தில் சைவம் மற்றும் வைணவ வளர்ச்சியால் இந்திரன் திசைத் தெய்வமாக மாற்றப்பட்டதை வரலாற்றின் வாயிலாக அறியமுடிகிறது. இக்கட்டுரைச் செவ்வியல் இலக்கியங்களில் இந்திரன் வழிபாடு பற்றிச் சிறப்பாக விளக்குகிறது.

துணைநூற்பட்டியல்

References

தொல்காப்பியர் – பதிப்பு, சரசுவதி மகால் நூலகம் ,தஞ்சாவூர். பதிப்பு ஆண்டு 1993

நற்றிணை (மூலமும் - உரையும்) – உ.வே.சா (பதிப்பாசிரியர்) டாக்டர் உ.வே.சாமிநாதையர் நூல் நிலையம், சென்னை – 600090.

ஐங்குறுநூறு (மூலமும் - உரையும்) – ஔவை சு.துரைசாமிபிள்ளை, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலை நகர், 1957.

பதிற்றுப்பத்து (மூலமும் விளக்க உரையும்) -திருநெல்வேலித் தென்னிந்திய

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை பதிப்பு ஆண்டு 1950.

பரிபாடல் (மூலமும் – உரையும்)- பரிமேலழகர்,கமர்ஷியல் அச்சுக்கூடம் : சென்னை, பதிப்பு ஆண்டு-1918

கலித்தொகை (உரையுடன்) - சக்திதாசன் சுப்பிரமணியன்(உ.ஆ),அன்பு வெளியீடு : புதுச்சேரி, பதிப்பு ஆண்டு-1958.

புறநானூறு : மூலமும் உரையும் - புலியூர்க் கேசிகன்(உ.ஆ), சாரதா பதிப்பகம் சென்னை.

சிலப்பதிகாரம் (மூலமும் உரையும்) - புலியூர்க் கேசிகன்(உ.ஆ), சாரதா பதிப்பகம் சென்னை.

மணிமேகலை (மூலமும் உரையும்) - புலியூர்க் கேசிகன்(உ.ஆ), சாரதா பதிப்பகம் சென்னை.

திருக்குறள் (பரிமேலழகர் உரை) – பழனியப்பா பிரதர்ஸ், சென்னை.

நாலடியார் (மூலமும் உரையும்) - புலியூர்க் கேசிகன்(உ.ஆ), சாரதா பதிப்பகம் சென்னை.

முத்தொள்ளாயிரம் மூலமும் விளக்க உரையும் – ந.சுப்புரெட்டியார், சாரதா பதிப்பகம் சென்னை.